# வேளாண்மை

## தேயிலை

1988 இன் தேயிலை உற்பத்தி, 1987 இன் சிறிதளவிலான அதிகரிப்பினைத் தொடர்ந்து முன்னைய ஆண்டினைவிட 6 சதவீதத்தால் 2,269 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கு உயர்வடைந்தது. இதுவே 1965 ஆம் ஆண்டு தொடக்கம் அறிவிக்கப் பட்டதில் அதி உயர்ந்த அளவு வெளியீடாகும்.


உற்பத்தி அதிகரிப்பில் காணப்பட்ட ஓர் அடிப்படைப் பண்பு யாதெனில், இது முற்றுக ஆண்டின் முதன் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் காணப்பட்ட சாதகமான காலநிலைமைகளின் காரணமாக ஏற்பட்டமையாகும். நான்காவது காலாண்டுக்கான உற்பத்தி தெற்கு, ஊவா, மாத்தளைப் பிரதேசங்களில் நிலவிய குழப்பமான நிலைமைகள் காரணமாகப் பின்னடைவினை அடைந்தது. உற்பத்தி யில் ஏற்பட்ட அதிகரிப்பு மூன்று உயரவகைகளிலும் பிரதிபலித்தவிடத்து தாழ் நிலங்கள், முன்னைய ஆண்டினைவிட ஆகக்கூடிய அதிகரிப்பான 11 சதவீதத்தினைப் பதிவு செய்தன. ஒப்பிடுகையில் உயர்நில, மத்திய நிலங்களின் உற்பத்திகள் முறையே 5 சதவீதத்தாலும், 2 சதவீதத்தாலும் உயர்வடைந்தன. தாழ்நிலத் தேயிலை உற்பத்தி முன்னைய மூன்று ஆண்டுகளையும் போலவே மொத்தத் தேயிலை உற்பத்தி யில் 42 சதவீதத்திற்கு வகைகூறித் தொடர்ந்தும் முன்னணியில் விளங்கியது.

மொத்தத் தேயிலை உற்பத்தியில் 98 சதவீதத்திற்கு வகைகூறிய ''மரபுவழி'' தேயிலை உற்பத்தி 1988 இல் 7 சதவீதத்தால் அதிகரித்து 2,228 இலட்சங் கிலோக்கிறாம்களாக விளங்கியது. வெட்டிக் கிழித்துச் சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தியும் 7 சதவீதத்தால் ஏறக்குறைய 10 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்த வேளையில் லோறி பதனிடல் தேயிலை உற்பத்தி 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 30 இலட்சம் கிலோக்கிறாம்களாக விளங்கியது.

அரசதுறையும் தனியார்துறையும் உற்பத்தி அதிகரிப்பினைச் சமனற்ற முறை யில் பகிர்ந்து, தனியார்துறை மொத்த அதிகரிப்பில் 74 சதவீதமளவுக்கு வகை கூறியது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினதும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் வாங்கப்பட்ட கொழுந்துகளின் தேயிலை உற்பத்திகளையும் உள்ளடக்கிய தேயிலை உற்பத்தி ஒவ்வொன்றும் 3 சத வீதத்தால் முறையே 744 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கும் 694 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கும் அதிகரித்தன. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை களாலும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தாலும் வாங்கப் பட்ட கொழுந்துகளின் தேயிலை உற்பத்தி தவிர்க்கப்படுமிடத்து அவற்றின் இணைந்த உற்பத்தி 3 சதவீதத்தால், 1987 இன் 1,246 இலட்சம் கிலோக்கிறாம்களி லிருந்து 1988 இல் 1,283 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்துக் காணப் பட்டது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் வாங்கப்பட்ட கொழுந்தி லிருந்தான தேயிலை உற்பத்தி 1988 இல் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தவேளையில் இலங்கை அரசபெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தினது உற்பத்தி மிதமான அதி கரிப்பைப் பதிவு செய்தது.

1987 இல் 10 சதவீதத்தால் உயர்வடைந்த தனியார்துறைத் தேயிலை உற்பத்தி 1988 இல் மேலும் 14 சதவீதத்தால் 830 இலட்சம் கிலோக்கிறாம் களுக்கு அதிகரித்து ஆண்டின் மொத்த உற்பத்தியில் 37 சதவீதத்திற்கு வகை கூறியது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினாலும், இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்தினாலும், தனியார்துறையிலிருந்தும் வாங்கப்பட்ட

## முதன்மை வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை 1.10**

**தேயிலைத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1986—1988**

| விடயம் | அலகு | 1986 | 1987 (அ) | 1988(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப.இ.கி. கிறும்கள் | 211.3 | 213.3 | 226.9 |
| 1.1 உயர் நிலம் ... | ,, | 77.1 | 73.4 | 76.8 |
| 1.2 மத்திய நிலம் ... | ,, | 53.3 | 53.5 | 54.3 |
| 1.3 தாழ் நிலம் ... | ,, | 80.9 | 86.4 | 95.8 |
| 2. தேயிலையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பரப்பு... | '000 எக்டேயர்கள் | 223 | 221 | 222 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொன்கள் | 128.8 | 136.7 | 137.4 |
| 4. மீளப் பயிரிடல் ... | எக்டேயர்கள் | 1,618 | 1,503 | 1,592 |
| 5. விலைகள் ... | | | | |
| 5.1 கொழும்பு தேறிய ... | ரூபா/கி. கி. | 30.28 | 38.06 | 41.59 |
| 5.2 ஏற்றுமதி க. எ. பெ. ... | ,, | 44.52 | 52.97 | 55.95 |
| 6. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 207.8 | 201.1 | 219.8 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. | 9,252.8 | 10,653.5 | 12,298.7 |
| 8. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் | (சி.எ.உ.ப. இ) | (281) | (280) | (288) |
| சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (இ) ... | | 4.5 | 5.5 | 5.1 |

அ. திருத்தப்பட்டது.
ஆ. தற்காலிகமானவை.
இ. பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை, தேசிய வளமாக்கிச் செயலகம், இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: எக்டேயர் ஒன்றுக்கான சராசரி விளைச்சலினதும் உற்பத்திச் செலவினதும் தரவுகள் கிடைக்கவில்லை.

பச்சைத் தேயிலையைத் தனியார்துறையின் கீழ்ச் சேர்க்குமிடத்து மொத்த உற்பத்தியில் அதன் ஒப்பீட்டுப் பங்கு 45 சதவீதமளவினதாகக் காணப்பட்டது. தனியார்துறையின் உற்பத்தியில் காணப்பட்ட இம்மேம்பாடு குறிப்பாக அண்மிய கடந்த காலத்தில் தாழ் நிலங்களில் சிறு உடைமையாளர்கள் பிரிவின் மேம்பாட்டினைப் பிரதிபலிப்பதாகக் காணப்பட்டது.

தேயிலைத்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1988 இல் 137,400 மெற்றிக் தொன்களுக்குச் சிறிதளவால் அதிகரித்தது. வளமாக்கி வழங்கலின் அதிகரிப்பு முற்றாக ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலுமே காணப்பட்டது. இது உற்பத்தியில் அதிகரிப்புக் காணப்பட்ட இக்காலப்பகுதிகளுடன் தொடர்புடையதாக விளங்கிற்று. ஆண்டின் கடைசிக் காலாண்டுப் பகுதியில், குறிப்பாகத் தென் பகுதிகளில் குழப்பமான நிலைமைகள் அதிகரித்து வளமாக்கியின் பங்கீடு, பாவனை என்பன பாதிக்கப்பட்டு வளமாக்கி வழங்கலில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டது. 1988 இல் வளமாக்கிப் பாவனை அதிகரிப்பு அரச பெருந் தோட்டங்களிலேயே ஏற்பட்டது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளின் தோட்டங்கள் 19 சதவீதத்தால் 47,359 மெற்றிக் தொன்களாக அதிகரித்தவிடத்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத் தோட்டங்கள் 8 சதவீதத்தால் 33,243 மெற்றிக் தொன்களாக அதிகரித்தது.

தேயிலைத்துறையின் எக்டேயருக்கான சராசரி விளைச்சல் மீதான தரவு முழுமையாகக் கிடைக்கத்தக்கதாகவில்லை. 1988 இல் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமான தோட்டங்களினது சராசரி விளைச்சல் எக்டேயருக்கு

முறையே 1,314 கிலோக்கிரும்களாகவும், 1,200 கிலோக்கிரும்களாகவும் 5 சத வீதத்தால் உயர்வடைந்து காணப்பட்டன. இதற்குச் சாதகமான காலநிலைமைகள் காரணமாகக் காணப்பட்ட உயர்ந்தளவு வளமாக்கிப் பாவனை காரணமாகும்.

1988 இல் தேயிலையின் கீழ் பதிவு செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 221,683 எக்டேயர்களாக மதிப்பிடப்பட்டு 1987 இனைவிட 185 எக்டேயர்கள் கொண்ட சிறிதளவிலான அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. கடந்த ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டுவந்த தேயிலைப் பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பின் வீழ்ச்சிப்போக்கு 1988 ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளின் கீழான பெருந்தோட்டங்களின் பயன்தரும் நிலப்பரப்பு 1987 இன் 54,156 எக்டேயர்களிலிருந்து 1988 இல் 52,542 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தவிடத்து இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினது நிலப்பரப்பு 1987 இன் 48,663 எக்டேயர்களிலிருந்து 1988 இல் 47,462 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு அரசதுறையின் சிறந்த செயலாற்றத்தின் விளைவாக 1987 இன் 1,503 எக்டேயர்களிலிருந்து 1988 இல் 1,592 எக்டேயர் களாக 6 சதவீதத்தால் அதிகரித்தது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினுல் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1987 இன் 493 எக்டேயர்களிலிருந்து 20 எக்டேயர்களினுல் உயர்வடைந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினுல் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1987 இன் 661 எக்டேயர்களிலிருந்து 144 எக்டேயர்களினுல் அதிகரித்துக் காணப்பட்டது. தனியார்துறையின் மீளப் பயிரிடல் செயலாற்றம் இதற்கு மாருக ஏமாற்றம் தருவதாக அமைந்தது. தேயிலைத்துறையின் வர்த்தக ஆற்றலினை மேம்படுத்துவதற்கு, முதிர்ச்சியடைந்த மரங்களை நீக்குதல் முக்கியமாகக் கருதப் பட்டமையினுல், மீளப் பயிரிடல் நடவடிக்கைகளில் அதிகளவிலான கவனத்தைச் செலுத்துதல் மிகவும் அத்தியாவசியமானதாகும்.

1988 இல் புதிய பயிரிடுகைக்குட்பட்ட நிலப்பரப்பு 1,076 எக்டேயர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 25 சதவீதம் அல்லது 361 எக்டேயர்கள் கொண்ட குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியினைப் பிரதி பலித்தது. இக் குறைந்த அளவிலான செயலாற்றம் அரசதுறை, தனியார்துறை இரண்டிலும் புதிதாகப் பயிரிடலில் காணப்பட்ட வீழ்ச்சிக்கு ஒரே காரணமாகும். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினுல் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1988 இல் 7 எக்டேயர்களால் 101 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினது நிலப்பரப்பு 49 எக்டேயர்களினுல் 97 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. இதே வேளையில் தனியார்துறையினுல் மீளப் பயிரிடப்பட்ட தேயிலையின் நிலப்பரப்பு 26 சத வீதத்தினுல் 878 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

முன்னைய ஆண்டுகளைப் போலவே தேயிலைச் சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை தேயிலைச் சிறு உடைமையாளர்களின் நலன்களைப் பேணு வதற்குப் பல வழிகளிலும் உதவியது. இவ்வாண்டுக் காலப்பகுதியில் தேயிலைச் சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை சிறந்த தயாரிப்பு வசதி களுக்கான வழிவகைகளை மேம்படுத்துவதற்கும், தனியார்துறைத் தேயிலைப் பயிரிடு

வோருக்கான பணிகளை அதிகரிப்பதற்குமான அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் அதிகரித்த கவனத்தைச் செலுத்தியது. 1988 இல் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை 12 தொழிற்சாலைகளைத் தொழிற்படுத்தியது. நீண்டகாலத் தேவையினை ஓரளவுக்கு நிறைவேற்றும் வகையில் தேயிலைச் சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபை பல தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட தேயிலையின் தரத்தினை மேம்படுத்துவதற்கு நவீன பொறித் தொகுதிகளைப் பொருத்தியது. 1988 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், சிறு உடைமையாளர் துறையின் தொடர்ச்சியான விரிவாக்கத்திற்கும் உற்பத்தித் திறன்களின் மேம்பாட்டுக்கும் விரிவாக்கப் பணிகளின் பரந்த முக்கியத்துவத்தினைக் கவனத்திற்கொண்டு 5 விரிவாக்கப்பணி நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1988 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலும் மீளப் பயிரிடல், புதிதாகப் பயிரிடல், இடைநிரப்பல் என்பவற்றுக்கான உதவுதொகை வீதங்கள் மாற்றமுறாது காணப்பட்டன. தேயிலைச் சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் பலவகைப் பயிரிடல் திட்டங்களின் கீழும் பகிர்ந்தளிக்கப்பட்ட உதவுதொகைகளின் மொத்த அளவு 1988 ஆம் ஆண்டில் மேலும் 23 சதவீதத்தால் ரூ. 450 இலட்சமளவிற்கு வீழ்ச்சியடைந்தது.

ஆண்டுக் காலப்பகுதியில் பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவர் நிலையம் தனியார்துறை தேயிலை உற்பத்தியாளர்களுக்கு ரூ. 350 இலட்சங் கொண்ட கடனை வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட மேக்கன்டைல் கிறடிற்றிற்கு வழங்கியது.

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளின் கிலோக்கிரும் ஒன்றுக்கான சராசரி கூட்டு உற்பத்திச் செலவு 17 சதவீதத்தால் ரூ. 46.92 க்கு அதிகரித்த வேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினது அத்தகைய செலவு 13 சதவீதத்தால் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 44.42 இற்கு உயர்வடைந்தது. பெருந்தோட்ட வேலையாட்களுக்கு வழங்கப்பட்ட கூலிகளின் அதிகரிப்பே கூட்டு உற்பத்திச் செலவின் உயர்வுக்கு முதலாவது காரணமாகும். அத்தோடு வளமாக்கி போன்ற உள்ளீடுகளின் உயர்ந்த விலைகளும் கூட்டு உற்பத்திச் செலவின் அதிகரிப்பில் தாக்கத்தினை ஏற்படுத்தின.

1988 இல் கொழும்பு ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட எல்லாத் தேயிலைகளினதும் சராசரி மொத்த விலை, 1987 இன் கிலோக்கிருமொன்றிற்கான ரூ. 39.30 இலிருந்து 9 சதவீதத்தால் அதிகரித்து 1988 இல் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 42.77 ஆக விளங்கியது. உயரவகை அடிப்படையில் உயர்நில மத்திய நிலத் தேயிலைகளின் சராசரி மொத்த விலை ஒவ்வொன்றும் 16 சதவீதத்தால் உயர்வடைந்தன. முன்னைய ஆண்டின் மேம்பாடடைந்த விலைச் செயலாற்றத்திற்கு மாறாகத் தாழ்நிலத் தேயிலைகளின் மொத்தச் சராசரி விலை முக்கியமாகத் தரம் குறைந்த தேயிலைகளின் வழங்கல் காரணமாகக் கிலோக்கிருமொன்று ரூ. 42.36 ஆகச் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. அண்மிய கடந்த காலத்தில் தாழ்நிலத் தேயிலை உற்பத்தியில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டபோதும் தரம் பேணப்படவில்லை. சிறந்த தரகுடைய தேயிலையைத் தயாரிப்பதும் அவற்றின் தரத்தைப் பேணுவதும் இக்கைத்தொழிலின் நீண்டகால வாய்ப்பினைப் பாதுகாக்க உடனடியாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினது கூட்டு மட்டத்திலான உற்பத்தியாளர் இலாபம் 1987 இன் கிலோக்கிருமொன்றுக்கான எதிர்க்கணிய இலாபமான ரூ. 4.12 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 5.26 இற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனங்களினது உற்பத்தியாளர் இலாபமும் 1987 இன் கிலோக்கிரும் ஒன்று ரூ. 0.40 கொண்ட எதிர்க்கணிய இலாபத்திலிருந்து 1988 இல் கிலோக்கிரு மொன்று ரூ. 2.69 ஆக வீழ்ச்சியடைந்தது.

1988 மாச்சு 1 ஆந் திகதி தொடக்கம் உற்பத்தியாளர்களுக்கு ஓர் நிவாரண நடவடிக்கையாகத் தேயிலை மீதான பெறுமான விகித விற்பனை வரி திருத்தியமைக்கப்பட்டது. விற்பனை வரிக்கான குறைந்தமட்ட விலை கிலோக்கிருமுக்கு ரூ. 40 இலிருந்து ரூ. 44 ஆக உயர்த்தப்பட்டவிடத்து வரி வீதம் மாற்றமுறாது 50 சதவீதமாகவே காணப்பட்டது. 1988 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதித் தீர்வை இரு தடவைகள் திருத்தியமைக்கப்பட்டன. 1988 யூன் மாதம் முதல் தயாரிக்கப்பட்ட தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை கிலோக்கிரு மொன்றுக்கு ரூ. 1 இனால் கிலோக்கிருமுக்கு ரூ. 3 ஆக அதிகரிக்கப்பட்ட வேளையில் பைகளிலடைக்கப்பட்ட தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை மீண்டும் விதிக்கப் பட்டது. தொகை வடிவிலான தேயிலை, உறைகளிலடைக்கப்பட்ட தேயிலை, உடன் தேயிலை என்பனவற்றின் மீதான ஏற்றுமதித் தீர்வைகள் 1988 நவெம்பரில் முறையே கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 2 இனால் முறையே கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 1.50 இற்கும், கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 1 இற்கும், கிலோக்கிரும் ஒன்றுக்கு ரூ. 6.50 இற்கும் கீழ்நோக்கித் திருத்தியமைக்கப்பட்டன. இதே வேளையில் பைகளிலடைக்கப்பட்ட தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை கிலோக்கிருமுக்கு ரூ. 1 இலிருந்து கிலோக்கிருமுக்கு ரூ. 0.50 ஆகக் குறைக்கப்பட்டது.

## இறப்பர்

1987 இல் கடுமையான பின்னடைவினை அடைந்த இறப்பர் உற்பத்தி 1988 இல் 9 இலட்சம் கிலோக்கிருமகளினால் சிறிதளவு மீட்சியடைந்து 1,224 இலட்சம் கிலோக்கிரும்களாக விளங்கியது. உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு முதலாவதாகச் சாதகமான காலநிலையினாலும் உயர்ந்த விலைகளின் நன்மைகளைப் பெறுவதற்காக மரங்களில் பாலெடுத்தலைச் செறிவுபடுத்தியமையினாலும் ஏற்பட்ட உயர்ந்த அளவிலான விளைச்சல் காரணமாக ஏற்பட்டதாகும்.

முன்னைய ஆண்டின் உற்பத்திச் செயலாற்றத்திற்கு மாறாக அரசதுறையின் உற்பத்தி 409,000 கிலோக்கிரும்களினால் சிறிதளவு அதிகரித்து மொத்த உற்பத்தியின் 33 சதவீதமளவுக்கு வகை கூறியது. சிறு உடைமைகளை உள்ளடக்கிய தனியார்துறையின் இறப்பர் உற்பத்தி சிறிதளவால் 491,000 கிலோக்கிரும் களளவில் 824 இலட்சம் கிலோக்கிரும்களுக்குச் சிறிதளவு அதிகரித்து மொத்த உற்பத்தியில் அதன் முன்னைய ஆண்டின் பங்கான 67 சதவீதத்தினைப் பேணியது.

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினதும் இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனங்களினதும் இறப்பர் உற்பத்தி சிறிதளவால் முறையே 2 சதவீதத்தாலும், 1 சதவீதத்தாலும் அதிகரித்தன. அவற்றின் இணைந்த உற்பத்தி (மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் வாங்கப்பட்ட லேட்டெக்ஸ் மூலமான இறப்பர் உற்பத்தி தவிர்க்கப்படுமிடத்து) 391 இலட்சம் கிலோக்கிரும்களாக விளங்கி 556,000 கிலோக்கிரும்கள் அல்லது 1 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

1988 இன் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 841 கிலோக்கிறும்களாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டினைவிட 2 சதவீதம் உயர்வானதாக விளங்கியது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினாலும் இலங்கை அரச பெருந் தோட்டக் கூட்டுத்தாபனத்தினாலும் முகாமைப்படுத்தப்பட்ட தோட்டங்களின் சராசரி விளைச்சல் முறையே 1 சதவீதத்தினால் எக்டேயருக்கு 1,039 கிலோக் கிறும்களாகவும் எக்டேயருக்கு 894 கிலோக்கிறும்களாகவும் அதிகரித்தன.

1988 இல் இறப்பரின் கீழான மொத்த நிலப்பரப்பு சிறிதளவால் 200,247 எக்டேயர்களாக வீழ்ச்சியடைந்தவேளையில் பாலெடுத்தலின் கீழான நிலப்பரப்பு 1,987 எக்டேயர்களால் அல்லது 1 சதவீதத்தினால் 145,495 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது. பின்னையது ஓரளவுக்கு ''கொறினெஸ் போரு கசிகோலா'' இலைப் புள்ளி நோயினால் பாதிக்கப்பட்ட இறப்பர் மரங்களைப் பிடுங்கியதனால் ஏற்பட்டதெனலாம். ஆண்டுக் காலப் பகுதியில் தனியார், அரசதுறை இரண் டிலும் இந்நோயினால் 725 எக்டேயர்கள் வரை பாதிக்கப்பட்டன.

அட்டவணை 1.11

**இறப்பர்த்துறை மீதான புள்ளி விபரங்கள் 1986—1988**

| விடயம் | கூறு | 1986 | 1987(அ) | 1988(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி ... | ப. இ. கி. கி. | 137.8 | 121.5 | 122.4 |
| 2. பரப்பளவு | | | | |
| 2.1. பயிர்ச் செய்கைக்குட்பட்ட ... | '000 எக்டேயர்கள் | 202.8 | 201.9 | 200.2 |
| 2.2. பால் எடுக்கும் ... | ,, | 149.9 | 147.5 | 145.5 |
| 3. விளைச்சல் ... | கி. கி. /எக்டேயர் | 919 | 824 | 841 |
| 4. வளமாக்கி வழங்கல்கள் ... | '000மெ. தொன்கள் | 26.3 | 23.4 | 25.0 |
| 5. மீள்நடுகை ... | எக்டேயர்கள் | 5,911 | 5,635 | 4,167 |
| 6. விலைகள் ... | | | | |
| 6.1. ஏற்றுமதிகள் க. ஏ. பெ. ... | ரூ. / கி. கி | 23.83 | 27.63 | 37.33 |
| 6.2. கொழும்பு ஆர். எஸ். எஸ். 1 ... | ,, | 16.62 | 19.87 | 24.40 |
| 7. உற்பத்திச் செலவு (இ) ... | ,, | 13.70 | 13.95 | 15.55 |
| 8. ஏற்றுமதிகள் ... | ப. இ. கி. கி. | 110.0 | 106.0 | 99.3 |
| 9. உள்நாட்டு நுகர்வு ... | ,, | 16.4 | 19.4 | 19.9 |
| 10. ஏற்றுமதி வருவாய்கள் ... | ரூ. ப. இ. (சிஎஉ. ப. இ.) | 2,622.0 (80) | 2,929.3 (77) | 3,705.9 (87) |
| 11. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஈ) ... | | 1.4 | 1.4 | 1.7 |

மூலங்கள்: இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.
தேசிய வளமாக்கிச் செயலகம்.
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) தனியார்துறையின் உற்பத்திச் செலவின் நிறையேற்றப்பட்ட சராசரி.
(ஈ) பயிர் வளர்த்தலிலும், பதனிடலிலும் மட்டும்.

முன்னைய ஆண்டினைப் போலல்லாது 1988 இல் இறப்பர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1,600 மெற்றிக் தொன்களால் அல்லது 7 சதவீதத்தால் உயர்வடைந்து 25,000 மெற்றிக் தொன்களாக விளங்கியது. மக்கள் பெருந் தோட்ட அபிவிருத்திச் சபையினாலும் இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தினாலும் பாவிக்கப்பட்ட வளமாக்கியின் அளவு ஒவ்வொன்றும் 4 சத வீதத்தால் முறையே 2,888 மெற்றிக் தொன்களுக்கும், 6,182 மெற்றிக் தொன் களுக்கும் வீழ்ச்சியடைந்தன. இவ்வாறாக இத்தரவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தனியார்துறையில் வளமாக்கிப் பாவனை அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றன.

1988 இல் மீள் பயிரிடல் நிகழ்ச்சித் திட்டம் பின்னடைவினைக் கொண்டிருந்தது. இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் தரப்பட்ட தற்காலிகத் தரவுகட்கமைய மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினாலும், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினாலும் இவ்வாண்டுக் காலப்பகுதியில் மீள் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பு முன்னைய ஆண்டில் அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பினைவிட 26 சதவீத வீழ்ச்சியினைக் காட்டி 4,167 எக்டேயர்களாக விளங்கியது. 1988 இல் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் முகாமைப்படுத்தப்பட்ட பெருந்தோட்டங்களில் மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 19 சதவீதத்தினால் 948 எக்டேயர்களாக அதிகரித்தவிடத்து இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களினது நிலப்பரப்பு 8 சதவீதத்தினால் 1,128 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்தது.

சிறு உடைமைகளையும் உள்ளடக்கிய தனியார்துறைப் பெருந்தோட்டங்களில் மீளப் பயிரிடல் 42 சதவீதத்தினால் 2,091 எக்டேயர்களுக்குக் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் மொத்த வீழ்ச்சிக்குக் குறிப்பாக ஆண்டின் முதல் அரைப்பகுதியில் நிலவிய கவர்ச்சியான விலைகள் பெரும்பாலான சிறு உடைமையாளர்களை மீளப் பயிரிடல் நிகழ்ச்சித் திட்டத்தை ஒத்திப்போடச் செய்தமை ஓரளவுக்குக் காரணமாயிற்று எனலாம். ஆண்டுக் காலப்பகுதியில் முக்கிய இறப்பர் பயிரிடும் மாவட்டங்களில் உலக வங்கியினால் உதவப்பட்ட இறப்பர் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் கீழ் 1,630 எக்டேயர்கள் மீளப் பயிரிடப்பட்டு, இச்செயற்றிட்டத்தின் கீழ் 1988 இறுதிவரை மீளப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பின் கூட்டு மொத்தத்தை 21,669 எக்டேயர்களாக்கியது.

1988 இல் புதிதாக இறப்பர் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 12 சதவீதத்தால் 1,508 எக்டேயர்களுக்கு வீழ்ச்சியடைந்து அண்மிய கடந்த காலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த அளவாக விளங்கியது. புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி முற்றாகத் தனியார்துறைக்கே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் 1988 இல் புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 148 எக்டேயர்களால் 327 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினது புதிய பயிரிடலும் 45 எக்டேயர்களினால் 1988 இல் 126 எக்டேயர்களுக்கு அதிகரித்தது.

இறப்பர் சிறு உடைமையாளர் புத்தாக்கச் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்டத் தொழிற்பாடுகள் 1988 யூலை மாதத்தில் முக்கிய இறப்பர்ப் பயிர்ச்செய்கை மாவட்டங்களான களுத்துறை, கேகாலை, இரத்தினபுரியில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் நிதி உதவியோடு ஆரம்பிக்கப்பட்டன.

முன்னைய ஆண்டினைப் போலவே 1988 இலும் இறப்பர்த்துறையில் பயிரிடுகை உதவுதொகைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. எனினும் ''கொறினெஸ்போறு கசிகோலா'' இலைப் புள்ளி நோயினால் பாதிக்கப்பட்ட தனியார் துறைப் பெருந்தோட்டங்கட்கு இழப்பீடுகளையும் மீள் பயிரிடல் உதவுதொகைகளையும் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

பெருந்தோட்ட வேலையாட்களின் கூலிகளில் அதிகரிப்பு ஏற்பட்டமை காரணமாக 1988 இல் தனியார்துறை அரசதுறைப் பெருந்தோட்டங்கள் இரண்டினதும் உற்பத்திச் செலவுகளில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டன. தனியார்துறை உற்பத்திச் செலவு 1987 இன் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 13.95 இலிருந்து 1988 இல் ரூ. 15.55 இற்கு உயர்வடைந்தது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனங்களின் உற்பத்திச் செலவு 1988 இல் 10 சதவீதத்தால் கிலோக்கிருமுக்கு ரூ. 23.50 ஆக அதிகரித்தவேளையில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைகளினது உற்பத்திச் செலவு 21 சதவீதத்தால் கிலோகிருமொன்றுக்கு ரூ. 24.26 ஆக உயர்வடைந்தது. செலவுகள் அதிகரித்தபோதும் உற்பத்தியாளர்கள் இறப்பரின் உயர்ந்த விலைகள் காரணமாக 1988 இல் குறிப்பிடத்தக்களவு இலாப அளவில் மேம்பாட்டினை அடையக்கூடியதாக இருந்தது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச்சபை தங்கள் உற்பத்தியாளர் இலாபத்தினை 1987 இன் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 0.26 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றுச்கு ரூ. 5.25 ஆக உயர்த்திக் கொள்ளக்கூடியதாக இருந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்கள் தங்கள் உற்பத்தியாளர் இலாபத்தை முன்னைய ஆண்டின் எதிர்க்கணிய இலாபமான கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 1.40 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 3.83 கொண்ட உற்பத்தியாளர் இலாபத்தைப் பதிவு செய்தது.

எல்லாத்தர இறப்பர்களினதும் சராசரி க.ஏ.பெ. விலை 35 சதவீதங் கொண்ட கணிசமானளவு அதிகரிப்பினைப் பதிவு செய்து 1988 இல் கிலோக்கிருமொன்று ரூ. 37.33 ஆக விளங்கியது. பன்னாட்டுச் சந்தையின் விலைப்போக்கினைத் தொடர்ந்து 1988 இன் முதலரைப்பகுதியில் கொழும்பு ஏலங்களில் எல்லாவகைத் தட்டை இறப்பர், லேட்டெக்ஸ் கிறேப், கழிவு கிறேப் இறப்பர்களினதும் விலைகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன. விலை மேம்பாட்டுக்கு முக்கிய உதவு காரணிகளாகப் பலமான குறிப்பாக மருந்தாக்க உற்பத்திக் கைத்தொழிலிலிருந்து ஏற்பட்ட கேள்வியும் உள்நாட்டிலும், உலக ரீதியிலும் இறப்பர் நிரம்பல்களில் ஏற்பட்ட குறைவும் விளங்கின. 1988 இன் இரண்டாம் அரைப்பகுதியில் குறைந்த அளவிலான கேள்வி, பன்னாட்டு இயற்கை இறப்பர் அமைப்பின் உயர்ந்த உற்பத்தி விற்பனை என்பனவற்றினைத் தொடர்ந்து உலக இறப்பர் நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பவை காரணமாக விலைகள் வீழ்ச்சியினைப் பதிவு செய்தன.

கொழும்பு ஏலங்களில் ஆர். எஸ். எஸ். I ஆர். எஸ். எஸ். II இனதும் சராசரி விலை 1987 இன் விலைகளைவிட 23 சதவீதத்தால் முறையே கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 24.40 ஆகவும் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 23.84 ஆகவும் அதிகரித்தன. லேட்டெக்ஸ் கிறேப் IXம் 1 ம் 1988 இல் முறையே 50 சதவீதத்திற்கும் மேலான அளவினால் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 32.80 ஆகவும் கிலோக்கிருமொன்றுக்கு ரூ. 32.37 ஆகவும் உயர்வடைந்தன.

இறப்பரின் உள்நாட்டு நுகர்ச்சி 3 சதவீதத்தினால் 1987 இன் 194 இலட்சம் கிலோக்கிரும்களிலிருந்து 1988 இல் 199 இலட்சம் கிலோக்கிரும்களுக்குச் சிறிதளவில் அதிகரித்து மொத்த உற்பத்தியில் 16 சதவீதத்திற்கு வகை கூறியது.

**தெங்கு**

1986, 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் முக்கிய தெங்குப் பயிரிடல் பிரதேசங்களில் காணப்பட்ட நீடித்த வரட்சி காரணமாக 1988 இல் தெங்கு உற்பத்தியில் தொடர்ந்து ஒரு மந்தநிலையை ஏற்படுத்தியது. இதன் விளைவாக 1987 இல் 22,920 இலட்சம் காய்களாக வீழ்ச்சியடைந்த தெங்கு உற்பத்தி 1988 இல் மேலும் 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 19,330 இலட்சம் காய் களாக விளங்கியது. இதுவே 1977 தொடக்கம் பதிவு செய்யப்பட்டதில் ஆகக் குறைந்த உற்பத்தி மட்டமாகும்.

1988 இன் குறைந்த தேங்காய் உற்பத்தி உள்ளூர்ச் சந்தையில் உயர்ந்த விலைகளை ஏற்படுத்தியதுடன் தேங்காய்த் துருவல், தேங்காயெண்ணெய் என்பன வற்றின் உற்பத்திக்குத் தேங்காயின் கிடைப்பனவையும் குறைவடையச் செய்தது. இதன் விளைவாகத் தேங்காய்த் துருவல், தேங்காயெண்ணெய் உற்பத்தி முறையே 55 சதவீதத்தாலும், 52 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. உலர்த்திய தேங் காய், உடன் காய்கள் என்பனவற்றின் ஏற்றுமதி அளவுகள் முறையே 43 சத வீதத்தாலும், 28 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

தெங்குத் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1988 இல் 2 சதவீதத்தால் 41,300 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. 1988 இன் நான்காவது காலாண்டில் அவதானிக்கப்பட்ட வளமாக்கிப் பாவனையின் வீழ்ச்சியும், வள மாக்கியின் விலைகள் உயர்ந்தமை, உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்தமை என்பன வற்றுடன் ஒரேவேளையில் இடம் பெற்றன. இலங்கை வங்கியாலும், மக்கள் வங்கியாலும், பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கியினாலும் தொழிற்படுத்தப் பட்ட தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம் 1988 இல் பின்னடைவினைப் பதிவு செய்தது. இத்திட்டத்தின் கீழ்ப் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 15 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 55 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

1988 இல் மீளப் பயிரிடப்பட்டதும், கீழ்ப் பயிரிடப்பட்டதுமான மொத்த நிலப்பரப்பு 1,960 எக்டேயர்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 35 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. மீளப் பயிரிடலுக்கும் கீழ்ப் பயிரிட லுக்குமான உதவுதொகைக் கொடுப்பனவுகள் ரூ. 160 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 6 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. புதிதாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1987 இன் 1,850 எக்டேயர்களிலிருந்து கூடியளவில் வீழ்ச்சியடைந்து 1988 இல் 1,102 எக்டேயர்களாக விளங்கியது. புதிய பயிரிடு கைக்கான உதவுதொகைக் கொடுப்பனவுகளும் 1987 இன் ரூ. 150 இலட்சங் களிலிருந்து 1988 இல் ரூ. 120 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் 3,991 எக்டேயர் தெங்கு நிலங்கள் புத்தாக்கம் செய்யப்பட்டன. முன்னைய ஆண்டோடு ஒப்பிடுகையில் இது 38 சதவீத வீழ்ச்சியைக் கொண்டிருந் தது. புத்தாக்கம் செய்வதற்கான உதவுதொகைக் கொடுப்பனவுகள் 1988 இல் 57 சதவீதத்தால் ரூ. 70 இலட்சங்களுக்கு வீழ்ச்சியடைந்தன. தெங்குத்துறையின் பயிரிடல் நடவடிக்கைகளின் முழுமையான செயலாற்றம் தொடர்ந்தும் இரண் டாவது ஆண்டாகக் குறைவானதாக விளங்கியது. உதவுதொகைக் கொடுப்பனவு களின் உண்மைப் பெறுமதியின் வீழ்ச்சியும், ஆண்டின் இறுதிப் பகுதியில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளும் பயிரிடல் நடவடிக்கைகளைப் பெருமளவுக்குப் பாதித்த தாகத் தெரிகிறது. 1988 காலப் பகுதியில் உதவுதொகைத் திட்டத்தினைப் பயன் படுத்த ஒழுங்குமுறைகளை இலகுவாக்கியும் தாமதங்களைத் தவிர்த்தும் பல வழி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அட்டவணை 1.12

## தெங்குத்துறை மீதான புள்ளி விபரங்கள் 1986—1988

| விடயம் | அலகு | 1986 | 1987 | 1988 (அ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (ஆ) ... | ப. இ. காய்களில் | 3,039 | 2,292 | 1,933 |
| 1.1. தேங்காய்த் துருவல் ... | ப. இ. காய்களில் (இ) | 428 | 350 | 156 |
| 1.2. தேங்காய் எண்ணெய் ... | ப. இ. காய்களில் (இ) | 1,146 | 573 | 276 |
| 1.3. உலர்த்தியதேங்காய் (ஈ) ... | ப. இ. காய்களில் (இ) | 48 | 44 | 25 |
| 1.4. உடன்காய் ஏற்றுமதிகள் ... | ப. இ. காய்களில் | 18 | 16 | 12 |
| 1.5. உள்நாட்டு தேங்காய் நுகர்வு (உ) ... | ப. இ. காய்களில் | 1,451 | 1,368 | 1,464 |
| 2. சராசரி ஏற்றுமதிவிலை (க. எ. பெ.) ... | காய்க்கு ரூபா | 1.46 | 2.64 | 4.00 |
| 3. வளமாக்கி வழங்கல்கள் ... | '000 மெ. தொ. | 31.6 | 42.2 | 41.3 |
| 4. உற்பத்திச் செலவு ... | காய்க்கு ரூபா | 0.60 | 0.99 | 1.21 |
| 5. மீள் பயிரிடல்/கீழ் பயிரிடல்(ஊ) ... | எக்டேயர்கள் | 4,206 | 2,922 | 1,960 |
| 6. புதிய பயிரிடல் (ஊ) ... | எக்டேயர்கள் | 1,465 | 1,850 | 1,102 |
| 7. ஏற்றுமதி வருவாய்கள் ... | ப. இ. ரூபா | 2,389 | 2,140 | 1,539 |
| | (சி.எ.உ. ப. இ.) | (73) | (56) | (36) |
| 7.1. உள்ளீட்டு உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 1,609 | 1,423 | 896 |
| | (சி.எ.உ. ப. இ.) | (49) | (37) | (21) |
| 7.2. ஏனைய உற்பத்திகள் ... | ப. இ. ரூபா | 780 | 717 | 643 |
| | (சி.எ.உ. ப. இ.) | (24) | (19) | (15) |
| 8. மொ. உ. உற்பத்தியின் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (எ) ... | | 2.6 | 2.6 | 2.7 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகம்.

(ஆ) மதிப்பீடு (உலர்த்திய தேங்காய் இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்கமாட்டாது.)

(இ) தேங்காய்க்குச் சமனான ஒரு — மெற். தொன் தேங்காய்த் துருவல் = 6,800 காய்கள்.
— மெற். தொன் எண்ணெய் = 8,000 காய்கள்.
— மெற். தொன் உலர்த்திய தேங்காய் = 4,925 காய்கள்.

(ஈ) ஏற்றுமதிகள் மட்டும்

(உ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 90 காய்களென்ற அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கைத்தொழில் பயன்பாட்டினைத் தவிர.

(ஊ) விபரமான தரவுகள் கிடைக்காமையின் காரணமாக 0.4 எக்டேயர்களுக்கும் குறைவான உடைமைகளில் மேற்கொள்ளப்பட்ட பயிரிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை.

(எ) உற்பத்தி செய்தலும் பதனிடலும் மட்டும்.

முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல் இவ்வாண்டுக் காலப்பகுதியில் தெங்குப் பதனிடல் குறிப்பாகத் தேங்காய்த் துருவல் உற்பத்தி தேங்காய் விலை அதிகரிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அதிகரித்த விலைகளிலும் தேங்காய்த் துருவல் உற்பத்தியைத் தொடர்ந்து செய்வதற்குத் தேங்காய்த் துருவல் ஆலையாளருக்கு உதவும் நோக்குடன் உடனடி நிவாரண வழிமுறையாகத் தெங்கு சமநிலைப்படுத்தும் நிதியம், 1988 இரண்டாவது அரைப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட ஒவ்வொரு கிலோக்கிறும் தேங்காய்த் துருவலுக்கும் ஒரு ரூபாவினை ஊக்குவிப்புப் படியாக வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் 57 தேங்காய்த் துருவல் ஆலையாளர்கள் 1988 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ரூ. 150 இலட்சங்களைப் பெற்றனர். அத்தோடு தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, வட்டி இல்லாத இலகுவான கடன்களைத் தேங்காய்த் துருவல் ஆலையாளர்கட்கு, ஆலைகள் மூடப்பட்டிருந்த காலப் பகுதியில் ஆலைத் தொழிலாளர்கட்கு நிவாரணக் கூலியினை வழங்குவதற்காகக் கொடுத்தது.

1988 இல் மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளினதும் விலைகள் கணிசமான அளவில் அதிகரித்தன. ஒரு தேங்காய்க்கான சராசரி ஏற்றுமதி க.ஏ.பெ. விலை 1987 இன் ரூ. 2.64 இலிருந்து 1988 இல் தேங்காய் ஒன்றிற்கு ரூ. 4.00 ஆக உயர்வடைந்தது. எனினும் பதனிடலுக்குக் கிடைக்கத்தக்க தேங்காய்களின் அளவு மிகக் குறைவாக இருந்தமையால் பன்னாட்டு விலை அதிகரிப்பின் முழு நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இவ்வாறாகத் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதி அளவு 1987 இன் 5,380 இலட்சம் காய்களிலிருந்து 1988 இல் 2,240 இலட்சம் காய்களுக்கு 58 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. 1988 இல் தேங்காயின் சராசரி உற்பத்திச் செலவு காய்க்கு ரூ. 1.21 ஆக மதிப்பிடப்பட்டு 1987 இன் தேங்காய்க்கான மதிப்பிடப்பட்ட செலவான ரூ. 0.99 இனைவிட 22 சதவீதம் உயர்வானதாக விளங்கியது. இதற்கு முக்கியமாக அதிகரித்த கூலிகளும் உள்ளீட்டு விலைகளும் காரணமாக இருந்தன.

**சிறு ஏற்றுமதிப் பயிர்கள்**

ஏற்றுமதியை முதன்மை நோக்கமாகக் கொண்ட உற்பத்திகளான பரந்த வகையிலான வாசனைத் திரவியங்கள், குடிபானங்களுக்கான பயிர்கள் என்பன சிறு ஏற்றுமதிப் பயிர்களின் வகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. முக்கிய பெருந்தோட்டப் பயிர்களுடன் ஒப்பிடுகையில் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் பங்கு ஒப்பீட்டு அடிப்படையில் குறைவானதாகும். 1988 இல் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஏறக்குறைய 4 சதவீதத்திற்கு வகைகூறின. சிறு ஏற்றுமதிப் பயிர்கள் பெரும்பாலும் 'வீட்டுத் தோட்டங்களில்' கலப்புப் பயிர்களாகப் பயிரிடுவதனால் உண்மையான வெளியீடு, பயிர்ச்செய்கையின் கீழுள்ள நிலப்பரப்பு என்பன மீதான நம்பத்தகுந்த தரவுகளைப் பெறுவது கடினமானதாகும். எனவே இத்துறையின் உற்பத்திச் செயலாற்றமானது அவற்றின் உள்நாட்டு நுகர்வு மிகச் சிறிதளவே என்ற ஊகத்தின் அடிப்படையில் அவற்றின் ஏற்றுமதி மூலமே கண்காணிக்கப்படுகின்றது.

சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதிச் செயலாற்றமானது முந்திய ஆண்டின் அவற்றின் மந்த நிலையான மட்டத்திலிருந்து 1988 இல் அவற்றில் பெருந்தொகையானவற்றின் வெளியீடுகள் மீட்சியடைந்தமையைக் காட்டுகின்றது. கோப்பியின் ஏற்றுமதி அளவு முந்திய ஆண்டினைவிட 1988 இல் ஏறக்குறைய ஐந்து மடங்கு அதிகரிப்பினைக் காட்டியது. கராம்பின் ஏற்றுமதி அளவு நான்கு மடங்கிற்கு மேலான அதிகரிப்பைப் பதிவுசெய்த வேளையில் சாதிக்காயும், சாதிப்பத்திரியும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. மிளகு (34 சதவீதம்), எள்ளு (33 சதவீதம்), மரமுந்திரி (8 சதவீதம்) என்பவற்றின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்கள் 1988 இல் இப்பயிர்களின் வெளியீடும் கணிசமாக அதிகரித்துள்ளமையை எடுத்துக் காட்டுகின்றன. முக்கிய உற்பத்திப் பிரதேசங்களில் காணப்பட்ட சாதகமான காலநிலை நிலைமைகள், அதிகரித்த வளமாக்கிப் பாவனை ஆகியவை இணைந்து 1988 இல் பெரும்பாலான பயிர்களின் வெளியீடு அதிகரிப்பதற்குக் காரணமாயின. உற்பத்தி வட்டத்தில் மேல்நோக்கிய போக்கு, கடந்த அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அதிகரித்த மர நடுதல் நடவடிக்கைகளின் காலம் தாழ்ந்த விளைவு என்பனவும் உற்பத்தியில் சாதகமான செல்வாக்கினைக் கொண்டிருந்திருக்கலாம். எனினும் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளைக் கொண்டு மதிப்பிடுகையில் கறுவா, கொக்கோ, ஏலக்காய் ஆகிய மூன்று முக்கிய பயிர்களின் உற்பத்தியும் 1988 இல் வீழ்ச்சி

யடைந்துள்ளதுபோல் தோன்றுகின்றது. 1988 இன் இறுதிப் பகுதியில் தென் மாகாணத்தில் நிலவிய அமைதியற்ற நிலை கறுவா உற்பத்தியில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தியது.

சிறு ஏற்றுமதிப் பயிர்த்துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 1987 இன் 3,200 மெற்றிக் தொன்களிலிருந்து 1988 இல் 4,645 மெற்றிக் தொன்களுக்கு 45 சதவீதத்தினல் அதிகரித்தது.

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தின்படி சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித் திட்டத்தின் கீழ்ப் புதிதாகப் பயிரிடப்பட்ட, மீளப் பயிரிடப்பட்ட, புத்தாக்கம் செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 1987 உடன் ஒப்பிடுகையில் 62 சதவீதத் தினுல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து 1988 இல் 1,765 எக்டேயர்களாக விளங்கியது. சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித் திட்டத்தின் கீழ் மிளகு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 1987 இன் 287 எக்டேயர்களிலிருந்து பெரும்பாலும் இரு மடங்காக அதிகரித்து 1988 இல் 567 எக்டேயர்களாக விளங்கியவிடத்து கோப்பி, கொக்கோ என்பன முறையே 25 சதவீதத்தாலும், 49 சதவீதத்தாலும் அதிகரித் தன. கறுவா தொடர்பாகப் புத்தாக்கம் செய்யப்பட்ட நிலப்பரப்பு 1988 இல் மூன்று மடங்கிற்கு மேலான அதிகரிப்பைப் பதிவு செய்தது. மாருகக் கராம்பின் புதிய பயிரிடல் 1987 இன் 96 எக்டேயர்களிலிருந்து 1988 இல் 37 எக்டேயர் களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

சிறு ஏற்றுமதிப் பயிர் உதவித் திட்டத்தின் கீழ்ச் செலுத்தப்பட்ட மொத்த உதவு தொகை 1987 இன் ரூ. 138 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 141 இலட்சத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தது. இத்திட்டத்தின் கீழ்ச் செலுத்தப் பட்ட மொத்த உதவுதொகைகளில் ரூ. 53 இலட்சம் அல்லது 38 சதவீதம் மிளகுச் செய்கைக்கு வழங்கப்பட்டதென்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண் டியதாகும்.

நெல்

1988 இல் நெல் உற்பத்தி 25 இலட்சம் மெற்றிக் தொன்களெனத் தற்காலிக மாக மதிப்பிடப்பட்டு கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வரட்சியின் பாதிப் புக்குட்பட்ட உற்பத்தியைவிட 16 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. (1,180 இலட்சம் புசல் நெல் அல்லது 17 இலட்சம் மெற்றிக் தொன் அரிசியாகும்) எனினும் 1988 இல் உற்பத்தி, 1985 இல் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய உற்பத்தியான 27 இலட்சம் மெற்றிக் தொன்களைவிட 7 சதவீதம் குறைவான தாகும். இம்முன்னேற்றம் கடந்த ஆண்டில் நிலவிய தொடர்ச்சியான வரட்சியி லிருந்து பரந்த அளவிலான மீட்சிக்குத் திரும்பியமையை எடுத்துக்காட்டும் சிறுபோக, பெரும்போக காலங்களிலான அதிகரித்த உற்பத்தியின் விளைவாக ஏற்பட்டதாகும்.

1987/88 பெரும்போக உற்பத்தி 15.2 மெற்றிக் தொன்களாக மதிப்பிடப் பட்டு (731 இலட்சம் புசல்) கடந்த ஆண்டுப் பெரும்போகத்துடன் ஒப்பிடுகையில் 132,193 மெற்றிக் தொன்கள் அல்லது 9 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது. எக்டேயருக்கான சராசரி விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும் முக்கியமாக விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு அதிகரித்ததாலும் பயிர் இழப்பு சார்பு ரீதியில் குறைவாக இருந்தமையாலும் இவ்வுற்பத்தி அதிகரிப்பு அடையப்பட்டது.

உலர் வலய மாவட்டங்களின் உற்பத்தியில் கணிசமான அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. வவுனியா மாவட்டம் கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகரிப்பைப் பதிவு செய்திருக்கையில் குருநாகல் மாவட்டம் மூன்று மடங்கிற்கு மேலான அதிகரிப்பைப் பதிவு செய்து நாட்டின் பெரும்போக மொத்த நெல் உற்பத்தியின் கூடிய பங்கான 14 சதவீதத்திற்கு வகை கூறியது.

*1988 சிறுபோகத்தில் நெல் உற்பத்தி 9 இலட்சம் மெற்றிக் தொன்களாக (450 இலட்சம் புசல்) மதிப்பிடப்பட்டு கடந்த ஆண்டின் சிறுபோகத்தைவிட 28 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப்பைக் காட்டியது. இவ்வதிகரித்த*

அட்டவணை 1.13

**நெல்துறை மீதான புள்ளி விபரங்கள் 1987—1988**

| விடயம் | அலகு | 1987 | | | 1988(அ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்தப பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 508 | 273 | 781 | 545 | 321 | 865 |
| வளமாக்கி வழங்கல்கள் (ஆ) | '000மெ. தொன்கள் | 115 | 36 | 151 | 134 | 70 | 204 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. ப. இ. | 183 | 79 | 262 | 185 | 50 | 235 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 433 | 246 | 679 | 499 | 312 | 811 |
| எக்டேயருக்கான விளைச்சல் (இ) ... | கி. கிறாம்கள் | 3,678 | 3,362 | 3,564 | 3,440 | 3,386 | 3,419 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பளவு ... | '000 எக்டேயர்கள் | 380 | 217 | 597 | 443 | 278 | 721 |
| உற்பத்தி ... | '000மெ. தொன்கள் ('000புசல்கள்) | 1,392 (66,727) | 735 (35,239) | 2,128 (101,966) | 1,525 (73,059) | 941 (45,098) | 2,466 (118,157) |
| உ.வி.தி. கீழ் கொள்வனவு செய்யப்பட்டவை (ஈ) ... | '000மெ. தொன்கள் | 57 | 7 | 64 | 102 | 3 | 105 |
| அரிசி இறக்குமதி ... (நெல்லிற்குச் சமன்) ... | '000மெ. தொன்கள் ,, | — | — | 102 (146) | — | — | 189 (277) |

மூலங்கள்: குடிமதிப்பு புள்ளி விபரத்திணைக்களம்,
வேளாண்மைத் திணைக்களம்,
வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு,
நெற் சந்தைப்படுத்தும் சபை,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை

(ஆ) பயிர்ச்செய்கை ஆண்டினதும் கலண்டர் ஆண்டினதும் வளமாக்கி வழங்கல்கள் அடிப்படையில் மாறுபட்டதாகும். பயிர்ச்செய்கை ஆண்டு பெரும்போகத்தையும் (செத்தெம்பர்/ஒற்றோபர்-மாச்சு/எப்பிறல்), சிறுபோகத்தையும் (எப்பிறல்/மே-ஓகத்து/செத்தெம்பர்) உள்ளடக்கும்.

(இ) பெரும்போக சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு, குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அத்தரவுகள் பயிர் அறுவடை அளவீடுகள் அடிப்படையில் அமைந்தனவாகும். அதேவேளையில், மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகிறது.

(ஈ) ஓகத்திலிருந்து திசெம்பர் காலப்பகுதியில் சிறுபோக-அறுவடை கொள்வனவு செய்யப்பட்டவேளையில் சனவரியிலிருந்து யூலை காலப்பகுதியில் பெரும்போக நெல் அறுவடை கொள்வனவு செய்யப்பட்டது.

உற்பத்திக்கான முக்கிய காரணிகளாக விதைக்கப்பட்டு அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு, சிறந்த சராசரி விளைச்சல் என்பன விளங்கின. அநேகமான மாவட்டங்கள் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. பெரும்போகத்தைப் போலவே சிறுபோகத்திலும் குருநாகல் மாவட்டம் அதி கூடிய உற்பத்தி அதிகரிப்பான 84,039 மெற்றிக் தொன்களைப் பதிவு செய்து இப்போகத்தின் மொத்த உற்பத்தியில் 15 சதவீதத்திற்கு வகை கூறியது.

1988 பயிர்ச்செய்கை ஆண்டில் எக்டேயருக்கான ஆண்டுச் சராசரி விளைச்சல் 3,419 கிலோக்கிறும்களாக மதிப்பிடப்பட்டு கடந்த ஆண்டின் சராசரி விளைச்சலை விட 4 சதவீதம் குறைந்து காணப்பட்டது. 1987/88 பெரும்போகத்தில் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 6 சதவீதத்தால் 3,440 கிலோக்கிறும்களுக்கு வீழ்ச்சி யடைந்திருக்கையில் 1988 சிறுபோகத்தின் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 3,386 கிலோக்கிறும்களுக்கு 1 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்தது. பெரும் போகத்தில் எல்லா நெல் உற்பத்திப் பிரதேசங்களும் (முக்கிய சிறிய நீர்ப்பாசனப் பகுதிகளும் மழை நீரை நம்பிய பகுதிகளும்) குறைந்த சராசரி விளைச்சலைப் பதிவு செய்ததுடன் முக்கிய நீர்ப்பாசனத்திற்குட்பட்ட பகுதி அதிகூடிய வீழ்ச்சி யான 8 சதவீதத்தைப் பதிவு செய்தது. இப்போகத்தில் அதிகரித்த வளமாக்கிப் பாவனை போதியளவு மழைவீழ்ச்சி என்பன காணப்பட்டபோதும் சராசரி விளைச் சலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அநேகமான முக்கிய நெல் உற்பத்தி செய்யும் பகுதி களில் காணப்பட்ட பருவம் தவறிய மழைவீழ்ச்சி காரணியாக விளங்கியது. சிறுபோகத்தில் முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகள், மழை நீரை நம்பிய பகுதிகள் என்பவற்றின் உற்பத்தியாக்கம் முறையே 5 சதவீதத்தாலும், 9 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் சிறிய நீர்ப்பாசனத்தின் கீழான பகுதிகளின் உற்பத்தி யாக்கம் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

இப்பயிர்ச்செய்கையாண்டில் விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பின் அளவு 84,096 எக்டேயர்களால் அல்லது 11 சதவீதத்தால் 865,322 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட நிலப்பரப்பளவு 544,628 எக்டேயர்களுக்கு 7 சதவீதத்தால் மட்டும் அதிகரித்திருக்கையில், சிறுபோகத்தில் அது 320,694 எக்டேயர்களுக்குக் குறிப்பிடத்தக்களவில் 17 சதவீதத்தால் அதிகரித்து, முக்கியமாகச் சாதகமான காலநிலைகளைப் பிரதிபலித்தது. 1987/88 பெரும்போகத்தில் சிறிய, முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகளில் பயிர் செய்யப்பட்ட அளவு முறையே 19 சதவீதத்தாலும், 6 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் மழை நீரை நம்பிய பகுதிகளில் இது சிறிதளவு அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தது. பயிர் செய்யப்பட்ட பரப்பில் ஏற்பட்ட 36 சதவீதம் கொண்ட கூடிய அதிகரிப்பு சிறு நீர்ப்பாசனப் பிரதேசங்களில் காணப்பட்டது. முக்கிய நீர்ப்பாசனப் பகுதிகள் மழை நீரை நம்பிய பகுதிகள் என்பவற்றின் கீழ்ப் பயிர் செய்யப்பட்ட அளவு முறையே 11 சதவீதத்தாலும், 18 சதவீதத்தாலும் அதிகரித்தது.

1988 இல் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பின் அளவு 19 சதவீதத்தால் 811,034 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. 1987/88 பெரும் போகத்தில் அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 15 சதவீதத்தாலும், 1988 சிறுபோகத்தில் இவ்வளவு 27 சதவீதத்தாலும் அதிகரித்தது. 1987/88 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு மொத்த உற்பத்தியில் சராசரி வீழ்ச்சியின் பாதகமான தாக்கத்தைக் குறிப்பிடத்தக்களவில் ஈடு செய்தது. விதைக்கப்பட்ட நிலப்பரப்பிற்கும் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பிற்கும் இடையிலான வேறுபாடாகக் கருதப்படும் பயிர்

இழப்பு அளவானது 46,075 எக்டேயர்களாக அல்லது பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட மொத்த அளவில் 8 சதவீதமாக இருந்தது. கடந்த பெரும்போகத்தில் இது தொடர்பான வீதமானது 15 சதவீதமாக இருந்தது. பிரதேச ரீதியில் 1987/88 பெரும்போகத்தில் மழை நீரை நம்பிய பகுதிகளில் ஆகக்கூடிய வீதமான பயிர் இழப்பு வீதம் 15 சதவீதமாகக் காணப்பட்டது. சிறுபோகத்தில் பயிர் இழப்பு வீதம் கடந்த சிறுபோகத்தின் 10 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3 சத வீதமென மதிப்பிடப்பட்டுள்ளது.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சின்படி 1987/88 பயிர் செய்கை ஆண்டின் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 204,190 மெற்றிக் தொன்களாக விளங்கின. இது முன்னைய பயிர்ச்செய்கையாண்டின் வழங்கலைவிட 35 சதவீதம் கூடியதாகும். 1987/88 பெரும்போகத்தில் வளமாக்கி வழங்கல்கள் 16 சதவீதத்தால்அதிகரித்திருக்கையில் 1988 சிறுபோகத்தில் அது கிட்டத்தட்ட இரு மடங்காக அதிகரித்தது. சாதகமான காலநிலைமைக்கு இசைவாகப் பரப்பளவு அதிகரித்தமை நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கலில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக விளங்கியது. விதைக்கப்பட்ட எக்டேயரொன்றிற்குப் பயன் படுத்தப்பட்ட வளமாக்கியின் சராசரி அளவும் பெரும்போகத்தில் 8 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் சிறுபோகத்தில் குறிப்பிடத்தக்களவில் 68 சதவீதத்தால் அதிகரித்தது. தேசிய வளமாக்கிச் செயலகத்தின்படி ஒரு கலண்டர் ஆண்டின் அடிப்படையில் நெற்றுறைக்கான வளமாக்கி வழங்கல் 1988 இல் 215,100 மெற்றிக் தொன்களாக அமைந்து 1987 இன் வழங்கல்களைவிடச் சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது.

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் 1988 இல் 105,497 மெற்றிக் தொன்களாக (5,055,000 புசல்கள்) அமைந்து 1987 இன் கொள்வனவுத் தொகையுடன் ஒப்பிடுகையில் 65 சதவீதங் கொண்ட கணிசமானளவு அதிகரிப்பினைக் காட்டியது. முக்கிய நெல் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளில் பெரும்போகத்திலும், சிறு போகத்திலும் ஏற்பட்ட கூடிய உற்பத்தி இவ்வதிகரிப்பிற்கு முதன்மையான பங்களிப்புக் காரணியாக விளங்கியது. அநுராதபுர மாவட்டத்திலிருந்தான நெல் கொள்வனவுகள் மும்மடங்கிற்கும் மேலாக அதிகரித்தவிடத்து, பொலனறுவை மாவட்டம் முந்திய ஆண்டின் கொள்வனவைவிட 43 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. முந்திய ஆண்டுகளைப் போலவே நெற்சந்தைப்படுத்தும் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் பெரும் பகுதி பெரும்போக அறுவடைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டதுடன் இது இவ்வாண்டின் மொத்தக் கொள் வனவுகளில் 97 சதவீதத்திற்கு வகை கூறியது. எனினும் நெற் சந்தைப்படுத்தும் சபையானது வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள சில மாவட்டங்களில் தனது வழமையான கொள்வனவு நடவடிக்கைகளைத் தொடர்ந்து நிலவிய குழப்பமான சூழ்நிலைகள் காரணமாக நிறைவேற்ற முடியாது போய்விட்டது. 1988 ஒகத்தில் நெல்லின் உத்தரவாத விலை, நெல் வேளாண்மையாளருக்குக் கூடிய இலாபத்தை வழங்குவதற்காகவும் வளமாக்கி விலையில் ஏற்பட்ட அதிகரிப்பின் பாதகமான தாக்கத்தைக் குறைப்பதற்காகவும் புசல் ஒன்றிற்கு ரூ. 70 இலிருந்து ரூ. 80 இற்கு மேல் நோக்கி உயர்த்தப்பட்டது. உத்தரவாத விலை மேல் நோக்கித் திருத்தி அமைக்கப்பட்டபோதிலும், நெல்லின் திறந்த சந்தை விலைகள் தொடர்ந்தும் உத்தரவாத விலையிலும் கூடியதாகக் காணப்பட்டது. 1988 இல் நெல்லின் சராசரி திறந்த சந்தை விலை புசல் ஒன்றிற்கு ரூ. 93.54 ஆக விளங்கி 1987 இன் விலையை 5 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

நெல்லின் இணைப்பு விலை (நெல்லுக்குச் சமமான மாற்றீடு செய்யப்பட்ட அரிசியின் விலை) புசலொன்றிற்கு 1987 இன் ரூ. 87 இலிருந்து 1988 இல் புசலொன்றிற்கு ரூ. 124 இற்கு அதிகரித்து 43 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப்பை எடுத்துக் காட்டியது. இது ஓரளவிற்குச் செலாவணி வீதத் தேய்வால் ஏற்பட்டபோதிலும், முக்கிய ஆசிய நெல் உற்பத்தி நாடுகளில் ஏற்பட்ட குறைந்த உற்பத்தி காரணமாகப் பன்னாட்டுச் சந்தை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கிய காரணியாக விளங்கியது. நெல்லின் சராசரி திறந்த சந்தை விலையைப் போலவே உத்தரவாத விலையும் தொடர்ந்தும் இணைப்பு விலைக்குக் கீழ் விளங்கியது. இது நெல்லின் உள்நாட்டுச் சந்தை விலைகள், பன்னாட்டுச் சந்தையின் விலைப் போக்குடன் ஒத்துப்போகாத தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

1987 இறுதியில் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் தொடங்கப்பட்ட ஆலையிடப்பட்டதும் சந்தைப்படுத்தப்பட்டதுமான அரிசியினைத் தரப்படுத்தல் 1988 இலும் தொடர்ந்தது. எனினும் இவ் அளவீட்டாலேயே பொருத்தமான விலையிடற் கொள்கையின்றி, இவ்வழிமுறையானது ஆரம்பத்தில் எதிர்பார்த்ததைப்போல உற்பத்தியாளரினதோ அல்லது நுகர்வோரினதோ நலன்களைப் பாதுகாக்கும்போல் தெரியவில்லை.

**சீனி**

1987 இல் 15 சதவீதத்தினால் 29,298 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்த மொத்தச் சீனி உற்பத்தி 1988 இல் 53,522 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து 83 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைக் காட்டியது. பெல்வத்தை, செவனகல தொழிற்சாலைகள் அவற்றின் உற்பத்தியினை முறையே 29,972 மெற்றிக் தொன்களுக்கும், 11,039 மெற்றிக் தொன்களுக்கும் இரு மடங்கிற்கு மேலாக அதிகரித்தன. இங்குரான தொழிற்சாலை 11,084 மெற்றிக் தொன்களுக்கு 28 சதவீதங் கொண்ட அதிகரிப்பினை அறிவித்தது. இத்தொழிற்சாலைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு சார்பு ரீதியில் சாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாகப் பதனிடலுக்குக் கிடைக்கத்தக்கதாக விருந்த கரும்பின் நிரம்பல் அதிகரித்தமை காரணமாக ஏற்பட்டதாகும். மாறாக கந்தளாய்த் தொழிற்சாலையின் சீனி உற்பத்தி கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்து 37 சதவீத வீழ்ச்சியினைப் பதிவு செய்தது. இது முக்கியமாகக் கந்தளாய்க் குளத்திலிருந்து கரும்புப் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட நீர் குறைவாக விளங்கியமையினால் ஏற்பட்ட குறைவான சராசரி விளைச்சல், குறைவான நிலப்பரப்பு அறுவடை செய்யப்பட்டமை என்பன காரணமாக ஏற்பட்டதாகும். மொனறாகலை சீனிக்கூட்டு நிலையம் இவ்வாண்டில் கரும்புப் பயிர்ச் செய்கையைஆரம்பித்தது.

1988 இன் நான்காவது காற்பகுதியில் தொழில்நிலையில் பற்றாக்குறையை ஏற்படுத்திய அரசியல் குழப்பங்களும், மின்வலு வழங்கலில் ஏற்பட்ட தடங்கலும் எல்லாச் சீனித் தொழிற்சாலைகளினதும் உற்பத்தியில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தின. தனியார்துறையின் சீனி உற்பத்தி முழுவதும் இவ்வாண்டின் மொத்த உற்பத்தியில் 56 சதவீதத்திற்கு வகை கூறிய பெல்வத்தை சீனிக் கூட்டு நிலையத்திலிருந்து வந்தது.

1988 இல் கரும்புப் பயிர்ச்செய்கையின் கீழான மொத்த நிலப்பரப்பு (முளை நாட்டுதல் உட்பட) செவனகல, பெல்வத்தைத் தொழிற்சாலைகளின் பயிர்ச்செய்கைக்குக் கீழ்க் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு குறைவாகஇருந்தமை காரணமாக 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 1988 இல் செவனகல, பெல்வத்தை தொழிற்சாலைகளின் கரும்புப் பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பு 16 சதவீதத்தினாலும், 13 சதவீதத்தினாலும் முறையே 1,760 எக்டேயர்களுக்கும், 4,585 எக்டேயர்களுக்கும் வீழ்ச்சியடைந்தது. மாறாகக் கந்தளாய், இங்குரான சீனித் தொழிற்சாலைகளினால் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 12 சதவீதத்தினாலும், 14 சதவீதத்தினாலும் முறையே 1,107 எக்டேயர்களுக்கும் 2,662 எக்டேயர்களுக்கும் அதிகரித்தது. அறுவடை செய்யப்பட்ட கரும்பின் மொத்த அளவு 1987 இன் 359,030 மெற்றிக் தொன்களிலிருந்து 56 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்து 1988 இல் 559,767 மெற்றிக் தொன்களாக விளங்கியது. செவனகல தொழிற்சாலையினால் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 1988 இல் ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகரிப்பினைப் பதிவு செய்த வேளையில் பெல்வத்தைச் சீனித் தொழிற்சாலை 40 சதவீத அதிகரிப்பினை அறிவித்தது. இங்குரான தொழிற்சாலையும் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவில் 39 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. மாறாக, கந்தளாய் தொழிற்சாலையினால் அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 17 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

முந்திய ஆண்டினைப் போன்று இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளினது சீனி பெறும் வீதம் 1988 இல் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தது. இங்குரானத் தொழிற்சாலையின் சீனி பெறும் வீதம் 1987 இன் 7.3 சதவீதத்திலிருந்து 1988 இன் 7.05 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியுற்றவேளையில் கந்தளாய், செவனகல தொழிற்சாலைகளின் வீதம் முறையே 5.09 சதவீதத்திற்கும் 7.25 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

கரும்பு உற்பத்தி செய்வதில் வகுக்கப்பட்ட பங்கீட்டைப் பெறுவோரினதும் தனியார்துறை வேளாண்மையாளரினதும் ஆற்றலையும், தேவையான நேரத்தில் அறுவடை செய்து தொழிற்சாலைக்கு வழங்குவதனையும் கருத்திற் கொண்டு சீனிக் கூட்டுத்தாபனம் தமது தொழிற்சாலைகளின் கீழ்வரும் நிலங்களை வகுக்கப்பட்ட பங்கீடு பெறுவோருக்குக் கரும்புப் பயிர்ச்செய்கைக்காகப் பங்கிட்டுக் கொடுத்தது. இவ்வழிமுறையை நடைமுறைப்படுத்துவதன்மூலம் இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் சீனி உற்பத்தியின் அதிகரிப்பினையும் உற்பத்திச் செலவில் குறைவினையும் எதிர்பார்த்தது.

இறக்குமதிகள் மூலமும், உள்நாட்டுச் சந்தையிலும் சீனியைக் கொள்வனவு செய்தல் தொடர்ந்தும் தனியார்துறையினாலும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தினாலும் மேற்கொள்ளப்பட்டது. உலக சந்தையில் சீனி விலைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினைத் தொடர்ந்து சீனி மீதான இறக்குமதித் தீர்வை 1988 நவெம்பரில் கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 7 இல் இருந்து கிலோக்கிராம் ஒன்றுக்கு ரூ. 4.50 ஆகக் குறைக்கப்பட்டது.

**சிறு உணவுப் பயிர்கள்**

உயர்ந்த பெறுமதியைக் கொண்ட சில பயிர்கள் நீங்கலாகப் பெரும்பாலான சிறு உணவுப் பயிர்கள் மிகச் சிறிய உடமைகளிலும் வீட்டுத் தோட்டங்களிலும் பெரும்பாலும் களப் பயிர்களாகப் பயிரிடப்படுவதனுல் பயிர்ச்செய்கையின் கீழான நிலப்பரப்பு, உற்பத்தி என்பன மீதான நம்பத்தகுந்த தரவுகளின் சேகரிப்பு கடினமான வேலையாகவுள்ளது. எனவே, சிறு உணவுப் பயிர்கள் பற்றிய எந்த ஆய்வும் இப்பயிர்கள் தொடர்பாகக் கிடைக்கக்கூடியதாகவுள்ள பெரும்பாலான தரவுகள் செப்பமற்ற மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதனுல் வரையறைகளுக்கு உட்பட்டதாகவுள்ளது.

வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சினுல் வழங்கப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி 1988 பயிர்ச் செய்கையாண்டில் பெரும்பாலான சிறு உணவுப் பயிர்களின் உற்பத்தி முன்னேற்றத்தினைப் பதிவு செய்துள்ளது. இது, முக்கியமாக குறைந்த அளவு நீரை வேண்டி நிற்கும் சிறு உணவுப் பயிர்களுக்கு மாறிய பெருமளவு நிலப்பரப்பு, சாதகமான காலநிலை நிலைமைகளினுலும் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டினுலும் கிடைக்கப்பெற்ற உயர்ந்த விளைச்சல் என்பனவற்றினுல் ஏற்பட்டதாகும். முன்னேற்றமான விரிவாக்கப் பணிகள், விதை பொருட்கள் கிடைக்கத்தக்கதாக இருந்தமை, விலை அதிகரிப்புக்களினுல் ஏற்பட்ட உயர்ந்த உற்பத்தியாளர் இலாபங்கள் என்பனவும் 1988 இல் சிறு உணவுப் பயிர்த்துறையின் சிறப்பான உற்பத்திச் செயலாற்றத்திற்குப் பங்களித்தன. சோளம், மிளகாய், தட்டைப்பயறு, குரக்கன் என்பனவற்றின் உற்பத்தியில் 1988 இல் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. 1987/88 பெரும்போகத்திலும், 1988 சிறுபோகத்திலும் இப்பயிர்களில் ஏற்பட்ட சிறப்பான செயலாற்றம் சாதகமான காலநிலை, பயிரிடப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமை போன்ற காரணிகளினுல் ஏற்பட்டதாகக் கூறலாம்.

1988 இல் உழுந்தின் உற்பத்தி 9 சதவீதத்தினுல் அதிகரித்தவேளையில் சோயா அவரையின் உற்பத்தி சிறிதளவினுல் அதிகரித்தது. உழுந்து, சோயா அவரை என்பனவற்றின் உற்பத்தியில் ஏற்பட்ட முழு அதிகரிப்பும் 1987/88 பெரும்போகத்தில் ஏற்பட்டது. உயர்ந்த பெறுமதி கொண்ட சிறு உணவுப் பயிர்களின் வகுப்பில் மிளகாயின் உற்பத்தி 30 சதவீதத்தினுல் கணிசமாக அதிகரித்தவேளையில் வெங்காயமும், எள்ளும் சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

பருவம் தவறிய மழை காரணமாக 1987/88 பெரும்போக காலத்தில் மழை நீரை நம்பிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கை சிறிதளவு காலம் தாழ்ந்த போதிலும் நீர்ப்பாசனத்திற்குட்பட்ட பிரதேசங்களில் குறிப்பாக மகாவலி அபிவிருத்திச் செயற்றிட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

பல சிறு உணவுப் பயிர்களின் உற்பத்திச் செயலாற்றம் திருப்திகரமானதாக இருந்தவேளையில் நிலக்கடலை, பயறு, உருளைக்கிழங்கு போன்ற பயிர்கள் உற்பத்தியில் வீழ்ச்சிகளைக் கொண்டிருந்தன. உருளைக்கிழங்கு உற்பத்தி இரண்டாவது ஆண்டாகத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கியமாக விதை உருளைக்கிழங்கு கிடைக்கத்தக்க கூடிய தன்மை தொடர்பான பிரச்சனைகள் காரணமாகப் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு குறைவடைந்தமையே காரணமாகும்.

1988 இல் சிறு உணவுப் பயிர்கள் துறைக்கான வளமாக்கி வழங்கல்கள் 75 சதவீதத்தினல் அதிகரித்து ஏறக்குறைய 38,800 மெற்றிக் தொன்களாக விளங்கின.

நெற்சந்தைப்படுத்தல் சபையினல் தொழிற்படுத்தப்பட்ட கீழ்மட்ட விலைத் திட்டம் இவ்வாண்டில் தெரிந்தெடுக்கப்பட்ட எட்டு சிறு உணவுப் பயிர்கள் தொடர்பாகத் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது. எனினும் சோளம், சோயா அவரை என்பனவற்றைப் பொறுத்தவரைமட்டும் கொள்வனவுகள் குறிப்பிடத் தக்களவில் காணப்பட்டன. சோளம், சோயா அவரை என்பனவற்றின் கொள் வனவுகள் முந்திய ஆண்டின் 6,880 மெற்றிக் தொன்களுக்கும், 705 மெற்றிக் தொன்களுக்கும் மாருக முறையே 42,608 மெற்றிக் தொன்களாகவும், 1,133 மெற்றிக் தொன்களாகவும் விளங்கின. நெற் சந்தைப்படுத்தும் சபையினல் இவ்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தட்டைப்பயறு, பயறு, எள்ளு, குரக்கன் என்பனவற்றின் அளவு முந்திய ஆண்டினைப் போன்று சிறு அளவிலேயே விளங்கியது.

**மீனும் கால்நடையும்**

1988 இல் தற்காலிக மதிப்பீடுகளின்படி மீன் உற்பத்தி, 1987 இன் உற்பத்தியான 190,002 மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 197,536 மெற்றிக் தொன்களாக விளங்கி 4 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டியது. மொத்த மீன் உற்பத்தியில் 79 சதவீதத்திற்கு வகை கூறும் கரையோர மீன்பிடி உற்பத்தி 1987 இன் 149,278 மெற்றிக் தொன்களிலிருந்து 1988 இல் 155,099 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது. 1988 இன் கரைகடந்த ஆழ் கடல் மீன் உற்பத்தித் துணைத்துறையும் உள்நாட்டு மீன்பிடித் துணைத்துறையும் ஒவ்வொன் றும் 4 சதவீதத்தால் அதிகரித்து முறையே 4,425 மெற்றிக் தொன்களாகவும், 38,012 மெற்றிக் தொன்களாகவும் விளங்கின. வடக்குக் கிழக்கு மாகாணங் களிலுள்ள மீன்பிடி நடவடிக்கைகளின் மீட்சி மெதுவாக இருந்ததால் உற்பத்தி வளர்ச்சியானது மிதமாகவே காணப்பட்டது. அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக, இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் தென் மாகாணத்தின் குறைக்கப் பட்ட மீன் உற்பத்தி மொத்த மீன் உற்பத்தியில் பாதகமான விளைவைக் கொண் டிருந்தது. கடந்த காலத்தைப் போலவே தனியார்துறை மொத்த மீன் உற்பத்தி யில் பெரும் பங்கிற்குத் தொடர்ந்தும் வகை கூறியதுடன் மீன்பிடிக் கூட்டுத் தாபனம் தனியார்துறையிலிருந்து மீனைக் கொள்வனவு செய்வதில் பெருமளவிற்கு ஈடுபட்டிருந்தது.

பல சிறப்பு மீன்பிடி அபிவிருத்தி செயற்றிட்டங்கள் சார்பான வேலை 1988 இலும் தொடர்ந்தது. இவை கிழக்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டம், மேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டம், புறணவெல துறை முகங்கள் செயற்றிட்டம், கூடு, தொட்டி மீன் வளர்ப்புச் செயற்றிட்டம், பருவ கால தொட்டி மீன் வளர்ப்புச் செயற்றிட்டம், வடமேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது. 1988 இல் வடமேற்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் 80 படகுகள் கட்டப்பட்டு வர்த்தக மீன்பிடிக்காக வழங்கப்பட்டன. கிழக்குக் கரையோர மீன்பிடி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழ உள்ள பிரதேசத்தில் கிழக்குக் கரை மீன்பிடியாளருக்கு ஐந்து மீன்பிடிக் கலங்களும் ஒதுக்கப்பட்டன.

கடல் மீன்பிடித்துறையில் புதிய படகுகளை வழங்குவதற்காகவும், மரபுரீதியான கலங்களைப் பொறிமயப்படுத்துவதற்காகவும் வழங்கப்பட்ட உதவுதொகை 1987 இன் 270 இலட்சங்களிலிருந்து 1988 இல் 290 இலட்சத்திற்கு அதிகரித்தது. கடல்மீன்பிடித் துறைக்குப் பலதரப்பட்ட உதவுதொகைத் திட்டங்களின் கீழ் 161 படகுகள், 307 மரபுரீதியான கலங்கள், 603 படகு ஊர்திகள், 24 கப்பல் உடற்பகுதி போன்றவையும் வழங்கப்பட்டன.

1988 இல் மீன்பிடித் தொழில்துறை அமைச்சு நன்னீர் மீன் குளங்களின் கீழான பரப்பளவை அதிகரிப்பதற்காகப் பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இவ்வாண்டில் உள்நாட்டு மீன்பிடித் துணைத்துறைக்கு, குள உதவு தொகைத் திட்டத்தின் கீழும் பருவகால நீர்த்தொட்டி மீன் வளர்ப்பு நிகழ்ச்சி செயற்றிட்டத்தின் கீழும் மீன் குளங்களைக் கட்டுவதற்கு ஏறக்குறைய ரூ. 10 இலட்சம் கொடுப்பனவு செய்யப்பட்டது. 971 எக்டேயர் பரப்பளவில் அமைந்த 148 பருவகால நீர்த்தொட்டிகளில் 90 இலட்சம் மீன் குஞ்சுகள் வளர்க்கப்பட்டன.

குடிமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 1988இல் பால் உற்பத்தி (எருமைப்பால் உட்பட) 2,260 இலட்சம் இலீற்றர்களாக விளங்கி கடந்த ஆண்டின் அளவைவிட 2 சதவீதங் கொண்ட ஒரு சிறு அதிகரிப்பைக் காட்டியது. வரையறுக்கப்பட்ட இலங்கை பால் கைத்தொழில்கள் (மில்கோ) 1988 இல் 660 இலட்சம் லீற்றர்களாக விளங்கி 1987 இன் அளவுடன் ஒப்பிடுகையில் 20 இலட்சம் இலீற்றர்கள் வீழ்ச்சியைக் காட்டியது. பால் சேகரிப்பில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சிக்கு வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளும், 1988 இறுதியில் தென் மாகாணத்தில் நிலவிய குழப்பங்களும் முதன்மைக் காரணிகளாக விளங்கின. கொழும்பு, கண்டி, மொனருகலை, பொலன்னறுவை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் பால் சேகரிப்பு நடவடிக்கைகளை கையாளுவதற்காக உருவாக்கப்பட்ட பால் நிலைய உற்பத்திக் கூட்டு நிலையங்கள் 1988 ஏப்பிறலில் கலைக்கப்பட்டு இவற்றின் தொழிற்பாடுகள் வரையறுக்கப்பட்ட மில்கோவிற்குக் கையளிக்கப்பட்டன. சிறந்த தரமான பாலை வழங்குவதற்காக வேளாண்மையாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் பாலிற்கான ஒரு புதிய கொடுப்பனவுமுறை 1988 ஏப்பிரலில் அறிமுகப்படுத்தப்பட்டது. வரையறுக்கப்பட்ட மில்கோவின் பால் கொள்வனவு விலையும் இலீற்றருக்கு 50 சதத்தால்1988 ஏப்பிறலில் மேல் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டது.

கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள விலங்கு பாதுகாப்பு நலத்துறை திணைக்களமும், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையும் அவற்றின் தொழிற்பாடுகளான இனப்பெருக்க பொருட்கள், கால்நடைப் பணிகள் என்பவற்றை வழங்கல், கிருமி நீக்கி முறையை அபிவிருத்தி செய்தல், கால்நடைத் துறையில் ஆளணியாளர்களைப் பயிற்றுவித்தல் போன்றவற்றை 1988 இலும் தொடர்ந்தும் மேற்கொண்டன. கால்நடையின் உற்பத்தியின் உள்ளார்ந்த வளத்தையும் நலத்தின் தரத்தையும் முன்னேற்றுவதன் மூலம் இறைச்சி, முட்டைகள் என்பவற்றின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் வெளிநாட்டு உதவி, உள்நாட்டு நிதிகள் என்பவற்றால் நிதியிடப்பட்ட பல சிறப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் 1988 இலும் தொடர்ந்து தொழிற்பட்டன. எனினும் குருநாகல் மாவட்ட கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டம், அநுராதபுர உலர் வலய

வேளாண்மைச் செயற்றிட்டம் இலங்கை,மேற்கு ஜேர்மனி ஆடு வளர்ப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம், இலங்கை, ஆசிய அபிவிருத்தி வங்கி கால்நடை அபிவிருத்தி செயற்றிட்டம் என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு உதவி நிகழ்ச்சித் திட்டங்களினதும் சிறப்பு பாற்பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டத்தினதும் செயலாற்றம், சிறப்பு பண்ணை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பவற்றின் செயலாற்றத்தில் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிலவிய அமைதியற்ற நிலை காரணமாக ஒரு பின்னடைவைக் கொண்டிருந்தது.

குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் 1988 இல் முட்டை உற்பத்தியை 7,780 இலட்சங்களெனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டின் அளவுடன் ஒப்பிடுகையில் 5 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. 1988 இன் இறுதிப் பகுதியில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலையும் சுற்றுலாக் கைத்தொழிலின் மிகக் குறைவான செயலாற்றம் காரணமாக ஏற்பட்ட குறைக்கப்பட்ட கேள்வியாலும் முட்டை உற்பத்தி கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன் சில சிறியளவுப் பண்ணைகளை மூடுவதற்கும் வழி சமைத்தது.

**கிராமியக் கொடுகடன்**

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் நெல்லினதும் துணை உணவுப் பயிர்களினதும் பயிர்ச்செய்கைக்காக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்காக மத்திய வங்கி மீள் நிதியிடல் வசதிகளை வழங்குகிறது. 1988 இன் பின்னரைப் பகுதியில் வளமாக்கி, விதை, கிருமி நாசினிகள் என்பவற்றின் விலை அதிகரிப்புக்களின் காரணமாகப் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் நிதியிடப்பட்ட பதினொரு பயிர்களுக்கான நிதியிடலின் அளவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1988 ஒத்தோபரில் ஆகக் குறைந்தது 50 சதவீதத்தால் மேனோக்கித் திருத்தப்பட்டன. புதிய அளவுகள் 1988, 89 பெரும்போகத்திலிருந்து நடைமுறைக்கு வர இருந்தன. சீரான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இவ்வளவுகள் உள்ளீட்டுச் செலவுகளின் மாவட்டச் சராசரிகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டன.

அட்டவணை 1.14, 1988 திசெம்பர் 31 இல் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கைக் கடன்களின் பெறுமதியை எடுத்துக் காட்டுகிறது. பயிர்ச்செய்கை ஆண்டில் வழங்கப்பட்ட எல்லாப் பயிர்களுக்குமான கடன்களின் பெறுமதி ரூ. 3,217 இலட்சமாக விளங்கியது. சாதகமான காலநிலை நிலைமைகள் நிலவியபோதிலும் முன்னைய பயிர்ச்செய்கையாண்டுடன் ஒப்பிடுகையில் இது 3 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. இவ்வீழ்ச்சிக்கு 1988 சிறுபோகத்திலும் அதன் பின்னர் உடனடியாகவும் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாகும். புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி 1986/87 பெரும்போகத்தின் ரூ. 2,200 இலட்சத்திலிருந்து 1987/88 பெரும்போகத்தில் ரூ. 2,280 இலட்சத்திற்கு 3.6 சதவீதத்தால் அதிகரித்தது. மாறாக 1988 சிறுபோகத்தில் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூ. 937 இலட்சமாக விளங்கி முன்னைய சிறுபோகத்தில் வழங்கப்பட்ட ரூ. 1,113 இலட்சத்திலிருந்து 15.8 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது.

இவ்வாண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 45 சதவீதத்திற்கு வகை கூறிய இலங்கை வங்கி புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் பயிர்க் கடன்களை வழங்குவதில் முன்னணி வங்கியாக விளங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 1,417 இலட்சமாக (மொத்தத்தில் 44 சதவீதம்) விளங்கி முன்னைய ஆண்டின் கடன் வழங்கல் சாதனையுடன் ஒப்பிடுகையில் 12 சதவீதமான வீழ்ச்சியைக் காட்டின. மொத்தக் கடன்களில் அட்டன் நெசனல் வங்கியினதும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் சார்புரீதியான பங்குகள் சிறியனவாகக் காணப்பட்டாலும் நடைமுறை ஆண்டில் அவற்றின் செயலாற்றம் இரண்டு முக்கிய வங்கிகளுடனும் ஒப்பிடுகையில் முன்னேற்றமடைந்துள்ளது. அட்டன் நெசனல் வங்கியால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 1988 பயிர்ச்செய்கை ஆண்டில் 8.6 சதவீதத்தால் அதிகரித்தன. இதே காலப்பகுதியில் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி ரூ. 57 இலட்சத்தால் ரூ. 135 இலட்சத்திற்கு 2.4 மடங்கால் அதிகரித்தது.

கடந்த காலத்தைப் போன்றே பயிர்க் கடன்களில் பெரும்பாலானவை (74 சதவீதம்) நெற்பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டன. எனினும் சிறு உணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட மொத்தக் கடன்களின் பெறுமதி 1987 இன் ரூ. 680 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 845 இலட்சத்திற்கு அதிகரித்தது. மொத்தமாக வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியில் சிறு உணவுப் பயிர்களின் சார்பு ரீதியிலான பங்கு 20.5 சதவீதத்திலிருந்து 26.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1988 இல் சிறு உணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன்களில் பெரும் பங்கு இலங்கை வங்கியாலும் (ரூ. 430 இலட்சம்), மக்கள் வங்கியாலும் (ரூ. 320 இலட்சம்) வழங்கப்பட்டவேளையில் அவற்றைத் தொடர்ந்து மிகுதியை அட்டன் நெசனல் வங்கி (ரூ. 83 இலட்சம்), பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி (ரூ. 10 இலட்சம்) பகிர்ந்தளித்தன. சிறு உணவுப் பயிர்களின் செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியின் அதிகரிப்பு பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இரண்டிலும் பிரதிபலித்தது. சிறு உணவுப் பயிர்களின் செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்கள் 1986/87 பெரும்போகத்தின் ரூ. 380 இலட்சத்திலிருந்து 1987/88 பெரும்போகத்தில் ரூ. 430 இலட்சத்திற்கு 13 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் 1987 சிறுபோகத்தின் ரூ. 300 இலட்சத்திலிருந்து 1988 சிறுபோகத்தில் ரூ. 410 இலட்சத்திற்கு 37 சதவீதத்தால் அதிகரித்தன.

DISCARDED

1988 இல் வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட பொதுவான வீழ்ச்சிக்கு நெற்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகும். அட்டவணை 1.14 பகிர்ந்தளிக்கப்பட்ட நெற்கடன்களின் பெறுமதி 1987 இன் ரூ. 2,630 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 2,370 இலட்சத்திற்கு 10 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றதைக் காட்டுகிறது. 1987 இன் ரூ. 815 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 524 இலட்சத்திற்கு ஏற்பட்ட இவ்வீழ்ச்சி முற்றிலும் சிறுபோகத்திலேயே ஏற்பட்டது. மாறாக 1988 பெரும்போகத்தில் வழங்கப்பட்ட நெற்கடன்கள் ரூ. 1,820 இலட்சத்திலிருந்து 1988 இல் 1,850 இலட்சத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தன.

## புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன்

*(1988 திசெம்பர் 31 ஆம்*

| காலம் | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி (இ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் |
| 1986/87 பெரும்போகம் ... | 93.2 | 12.2 | 105.4 | 72.4 | 22.8 | 95.2 | 12.5 | 3.1 | 15.6 |
| 1987 சிறுபோகம் | 41.9 | 14.1 | 56.0 | 37.4 | 11.9 | 49.3 | 0.5 | 3.5 | 4.0 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1987 ... | 135.1 | 26.3 | 161.4 | 109.8 | 34.7 | 144.5 | 13.0 | 6.6 | 19.6 |
| 1987/88 பெரும் போகம் | 90.2 | 13.3 | 103.5 | 74.3 | 26.0 | 100.3 | 12.9 | 3.6 | 16.5 |
| 1988 சிறு போகம் | 19.5 | 18.7 | 38.2 | 27.7 | 17.2 | 44.9 | 0.1 | 4.7 | 4.8 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1988(ஆ) | 109.7 | 32.0 | 141.7 | 102.0 | 43.2 | 145.2 | 13.0 | 8.3 | 21.3 |

(அ) வங்கிகளினால் வழங்கப்பட்ட தொகை.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் / புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்திற்கு வெளியே அட்டன் நசனல் வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களையும் உள்ளடக்கும்.

*அட்டவணை 1.14*

**திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள் (அ)**

*நாளில் உள்ளவாறு நிலைமை)*

**ப. இ. ரூபாய்களில்**

| இந்தியன் ஓவசீஸ் வங்கி | | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | மொத்தக கடன்கள் | | பு.அ.உ.கி.கொ.திட்டத்தின்கீழும் அ.உ.கி.கொ. திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | சிறு உணவுப் பயிர்கள் | |
| 0.3 | — | 0.3 | 3.6 | 0.1 | 3.7 | 182.0 | 38.2 | 220.2 |
| — | — | — | 1.7 | 0.3 | 2.0 | 81.5 | 29.8 | 111.3 |
| 0.3 | — | 0.3 | 5.3 | 0.4 | 5.7 | 263.5 | 68.0 | 331.5 |
| — | — | — | 7.4 | 0.3 | 7.7 | 184.8 | 43.2 | 228.0 |
| — | — | — | 5.1 | 0.7 | 5.8 | 52.4 | 41.3 | 93.7 |
| — | — | — | 12.5 | 1.0 | 13.5 | 237.2 | 84.5 | 321.7 |

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி.
இந்தியன் ஓவசீஸ் வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

ஆய்விற்குரிய ஆண்டில் நெற்பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட மொத்தத் தொகையான ரூ. 2,370 இலட்சத்தால் ரூ. 1,100 இலட்சம் மக்கள் வங்கியால் வழங்கப்பட்டது. முன்னைய ஆண்டின் இதே போக்கினைத் தொடர்ந்து கடன் வழங்கும் வங்கிகள் கடன் வழங்கும்போது நீர்ப்பாசன பகுதிகளுக்கு கடன் வழங்கு வதிலேயே கூடிய அக்கறை கொண்டிருந்தன. 1987, 1988 பெரும்போகத்தில் அனைத்தையும் உள்ளடக்கிய' கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் கொடுகடன் வழங்கப்பட்ட மொத்தப் பரப்பளவான 102,055 ஏக்கர் நிலத்தில் 78 சத வீதமானவை முதன்மை நீர்ப்பாசன நிலங்களாக விளங்கின. சிறுபோகத்தில் கடன் வழங்கப்பட்ட மொத்தப் பரப்பளவான 33,117 ஏக்கர்களில் 80 சத வீதமான நிலங்கள் முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்களுக்குக் கீழ் உள்ளனவாக விளங்கின. உடமைகளின்படி வழங்கப்பட்ட கடன்களின் பகுப்பாய்வு கடன் வழங்கும் வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை குடியேற்ற வாசிகளுக்கு நீர்ப்பாசன நிலைமையின் கீழ் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட மையைக் காட்டுகின்றது. 1987, 88 பெரும்போகத்திலும் 1988 சிறுபோகத்திலும் இவை மொத்தக் கடன்படுநர்களின் எண்ணிக்கையில் முறையே 56 சதவீதத்திற் கும், 55 சதவீதத்திற்கும் வகை கூறின.

1987, 88 பெரும்போகத்தில் செலுத்தத் தவறிய கடன்களில் 2,355 கடன்படுநர்களின் ரூ. 113 இலட்சங் கொண்ட கடன்கள் மீள அட்டவணையிடப் பட்ட வேளையில் சிறுபோகத்தில் 50 கடன்படுநர்களுக்கு முற்பணமாக வழங்கப் பட்ட ரூ. 1.1 இலட்சங் கொண்ட 50 கடன்கள் மீள அட்டவணையிடப்பட்டன. 1986 சிறுபோகத்திலும், 1986, 87 பெரும்போகத்திலும் வழங்கப்பட்ட இழப்புக் களுக்குள்ளான கடன்களின் மீது நடைமுறையாண்டின் இறுதியில் புதிய அனைத்தை யும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ்ப் பங்குபற்றும் வங்கி களால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதம் முறையே ரூ. 120 இலட்ச மாகவும், ரூ. 160 இலட்சமாகவும் விளங்கின.